# கரூர் மாநகராட்சி

**2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## பொருள்கள்

**1)** கரூர் மாநகராட்சி சுகாதார பணிக்கு 2 எண்கள் 575H (Tractor with dozng vehicle) டிராக்டரின் டோஸிங் ஏற்பாடு வாகனங்களுடன் சப்ளை செய்யும் பணிக்கு ரூ.**20.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.**21191/2021**/அம்ருட்–2, நாள்.**21.03.2022**ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள முதன் முறையாக **27.05.2022**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00லட்சம்**

1. M/s.Adharvaa Tractor & Farm Equipments, Karur மதிப்பீட்டைவிட 4.90% சதம் அதிகம்
2. M/s.Bhagavathi Tractors, Dindugal மதிப்பீட்டைவிட 20.00% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. 15வது நிதிக்குழு மானியம் (15th CFC) **2021–2022** Tied Grant திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ.**20.00** இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார பணிக்கு 2 எண்கள் 575H (Tractor with dozng vehicle) டிராக்டரின் டோஸிங் ஏற்பாடு வாகனங்களுடன் சப்ளை செய்யும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மாமன்றத்தின் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளியின் அதிக சதவிகிதத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Adharvaa Tractor & Farm Equipments, Karur என்பவர் மதிப்பீட்டினைவிட 4.90% கூடுதலான சதவிகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி விலை குறைப்பு கடிதம் இவ்வலுவலக கடித ந.க.எண்.**இ1/1349/2021**, நாள்.**04.06.2022**ன் மூலம் கோரியதில், ஒப்பந்ததாரர் **06.06.2022**ம் தேதிய கடிதத்தில் வாகனத்திற்கான Registration, Insurance and Installation செலவினம் உட்பட விலை குறிப்பிடப்பட்டுள்ளதால், விலையினை குறைத்துத் தர இயலாது என்று கூறியுள்ளார்கள். மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ளவும், மதிப்பீட்டினைவிட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% சதவிகித தொகைக்குள் மாமன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் **M/s.Adharvaa Tractor & Farm Equipments, Karur** என்பவர் 4.90% சதவிகித கூடுதல் தொகையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர் மூலம் பணியினை செய்து முடிக்கவும், அதற்கான உத்தரவு வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **06.06.2022**ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1349/2021)**

**தீர்மான எண்.599** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**2)** கரூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் **25** எண்ணிக்கை LCV வாகனங்கள் சப்ளை செய்யும் பணிக்கு ரூ.**171.75** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.**21191/2021**/CFC, நாள்.**20,06.2022**ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **05.08.2022**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.171.75லட்சம்**</u>

1. M/s.SDS Technologies, Hyderabad மதிப்பீட்டைவிட 2.06% சதம் குறைவு
2. M/s.Neptune Automation, Erode மதிப்பீட்டைவிட 18.04% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21191/2021/CFC, நாள்.20,06.2022ல் **15வது நிதிக்குழு மானியம் (15th CFC)** 2020-2021 Tied Grantன் திட்டத்தில் ஒதுக்கிடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ.171.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணியினை மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.SDS Technologies, Hyderabad அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 05.08.2022ல் முன் அனுமதி பெற்று M/s.SDS Technologies, Hyderabad நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1349/2021)

**தீர்மான எண்.600** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**3)** கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். மேலும் 21.10.2021 முதல் கரூர் நகராட்சி **கரூர் மாநகராட்சியாக** தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கரூர் மாநகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ்பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.37 சுங்ககேட் பகுதியில் நவீன குளிர்சாதன வசதிகளுடன் கூடிய மீன்மார்க்கெட் வளாகம் அமைக்கும் பணிக்கு ரூ.216.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு உரிய நிர்வாக அனுமதியும், அரசின் **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ம்** ஆண்டின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று இப்பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதியும், அரசின் **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ம்** ஆண்டின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(5187/இ1/2022)

**தீர்மான எண்.601** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**4)** கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம் கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011–ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ, பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். தற்போது மக்கள் தொகை 2,41,458 ஆகும். மேலும் 21.10.2021 முதல் கரூர் நகராட்சி **கரூர்**

**மாநகராட்சியாக** தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கரூர் மாநகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ்பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறும் நகரமாக உள்ளது. இதனால் நாள்தோறும் பணி நிமித்தமாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

எனவே, இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரை பகுதிகளில் உள்ள மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்றியமைக்கும் பணிக்கு 5728.70 மீட்டரில் ரூ.510.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு உரிய நிர்வாக அனுமதியும், **அரசின் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022 –2023ம்** ஆண்டு திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தருவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.510.00இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட கருத்துருவிற்கு மாமன்றம் மேயர் அவர்களின் முன்அனுமதி நாள்.18.08.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/5518/2022)

**தீர்மான எண்.602** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**5)** தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021–2022 – கரூர் மாநகராட்சி உள்ளாட்சி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் மற்றும் பரிசீலனைக்கு தேவையான சாமியானா பந்தல் , டேபிள் சேர் மற்றும் ஆடியோ சிஸ்டம் வாடகைக்கு அமைத்தல் ஆகிய பணிகளை ரூ.5.75 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | M/S.ACG Venturtes, Karur | 0.03% குறைவு |
| 2) | M/S SA Groups, Karur | 0.74% அதிகம் |
| 3) | M/s.Sree Andal Karur | 1.47% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1)மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/S.ACG Venturtes, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.5,60,410/–மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ1/10100/2022)

**தீர்மான எண்.603** பதிவு செய்யப்பட்டது.

**6)** கரூர் மாநகராட்சி மண்டலம்–1க்கான அலுவலகத்திற்கான இடம் இல்லாமையால் தற்பொழுது வாடகை அடிப்படையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குட்பட்ட கட்டிடத்தில் இயங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் மண்டல அலுவலகம் இயங்கும் வகையில் கட்டிடத்தினை பராமரிப்பு வகையில் கட்டிடத்தினை பராமரிப்பு பணிகள் செய்தும், மண்டலத் தலைவர் அறை, கூட்ட அரங்கு, அலுவலர்கள் அறை, பணியாளர்களுக்கான இருக்கை வசதிகள், அலுமினியத் தடுப்புகள் புதிய மேஜைகள், நாற்காலிகள், மின்விக்கு வசதிகள் பால்ஸ் சீலிங் வசதிகள், மின்விசிறிகள் மற்றும் குளிர்சாதன வசதிகள் செய்யும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1) | M/s.Sunmathi Construction, Karur | 0.09% குறைவு |
| 2) | M/s.Ambigai Construction, Karur | 0.76% அதிகம் |
| 3) | Thiru.R.Sathiskumar, Karur | 1.12% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.25,00,000/-மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.604** பதிவு செய்யப்பட்டது.

**7)** கரூர் மாநகராட்சி மண்டலம் – IIற்குட்பட்ட வார்டு எண். 26-ல் உள்ள கே.வி.பி நகர் மேற்கு மெயின் ரோடு மற்றும் தென்வடல் தார்சாலை மிகவும் பழுது ஏற்பட்டு பொதுதுக்களின் போக்குவரத்திற்கு மிவம் சிரமமாக உள்ளதாலும் அப் பகுதியில் உள்ள ஸ்ரீ ஞானகந்தன் கோவில் கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற உள்ளதாலும் மேமறபடி சாலையினை தார் சாலையாக அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.12.00லட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (4926/2022/இ1)

**தீர்மான எண்.605** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**8)** கரூர் நகராட்சி மண்டலம்-IIற்கு உட்பட்ட வார்டு எண்.26ல் உள்ள கே.வி.பி நகர் 2வது தெரு மற்றும் 3வது தெருவில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுது ஏற்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாலும் மேற்படி சாலையினை தார்சாலையாக அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பிட்டுத் தொகை ரூ.21.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்காக செலவினத் தொகை ரூ.21.00லட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (4924/2022/இ1)

**தீர்மான எண்.606** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**9) தூய்மை பாரதம் இயக்கம் (urban) 2.0 -2022-2023** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.19.28இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022ல் உரியஅனுமதிவழங்கப்பட்டதின் அடிப்படையில்இம்மாநகராட்சிக்குட்பட்டவார்டு எண்.19 தாந்தோணி குடித்தெருவில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணியினைரூ.19.28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள முதன் முறையாக 29.09.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.19.28லட்சம்</u>**

1. M/S,RPS Construction, Karur மதிப்பீட்டைவிட 4.91% சதம் அதிகம்
2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 5.90% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. **தூய்மை பாரதம் இயக்கம் (urban) 2.0 -2022-2023** திட்டத்தின் கீழ்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.**19.28**இலட்சம் செலவு செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.**18856/2022**/தூஇதி2, நாள்.**13.07.2022**ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு இம்மாமன்ற தீர்மான எண்.**507**, நாள்.**26.09.2022**ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**2.** மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக சதவிகிதத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S,RPS Construction, Karur என்பவர் மதிப்பீட்டினைவிட **4.91**ரூ கூடுதலான சதவிகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி விலை குறைப்பு கடிதம் இவ்வலுவலககடித ந.க.எண்.இ**1/5707/2021**, நாள்.**30.09.2022**ன் மூலம் கோரியதில், ஒப்பந்ததாரர் **03.10.2022**ம் தேதிய கடிதத்தில் கட்டுமானப் பொருட்களான ஜல்லி, சிமெண்ட், பணியாளர்களின் சம்பளம் மற்றும் மூலப்பொருட்களுக்கான GSTல் கூடுதல் செலவினம் ஆகியவற்றினால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக் கொள்ளவும், மதிப்பீட்டினைவிட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% சதவிகித தொகைக்குள் மாமன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் M/S,RPS Construction, Karur என்பவர் 4.91% சதவிகித கூடுதல் தொகையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர் மூலம் பணியினை செய்துமுடிக்கவும், அதற்கான உத்தரவு வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1243/2021)**

**தீர்மான எண்.607** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**10) தூய்மை பாரதம் இயக்கம் (urban) 2.0–2022–2023** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதியில் புதிய பொதுகழிப்பிடம் அமைக்கும் பணிக்கு ரூ.**31.28**இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.**18856/2022**/தூஇதி2, நாள்.**13.07.2022**ல் உரிய அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**25** முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் பொதுகழிப்பிடம் கட்டும் பணியினை ரூ.**31.28** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள முதன் முறையாக **29.09.2022**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.31.28லட்சம்**</u>

**1.** M/S,RPS Construction, Karur மதிப்பீட்டைவிட 4.95% சதம் அதிகம்

**2.** Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 5.45% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

**1. தூய்மை பாரதம் இயக்கம் (urban) 2.0–2022–2023** திட்டத்தின்கீழ் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய பொதுகழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.**31.28**இலட்சம் செலவு செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.**18856/2022**/தூஇதி2, நாள்.**13.07.2022**ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு இம்மாமன்ற தீர்மான எண்.**507**, நாள்.**26.09.2022**ல் ஒப்புதல்பெறப்பட்டுள்ளது

**2.** மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக சதவிகிதத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S,RPS Construction, Karur என்பவர் மதிப்பீட்டினைவிட 4.95% கூடுதலான சதவிகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார். மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி விலை குறைப்பு கடிதம் இவ்வலுவலககடித ந.க.எண்.இ**1/5707/2021**, நாள்.**30.09.2022**ன் மூலம் கோரியதில், ஒப்பந்ததாரர் **03.10.2022**ம் தேதிய கடிதத்தில் கட்டுமானப் பொருட்களான ஜல்லி, சிமெண்ட், பணியாளர்களின் சம்பளம் மற்றும் மூலப் பொருட்களுக்கான GSTல் கூடுதல் செலவினம் ஆகியவற்றினால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து

முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக் கொள்ளவும், மதிப்பீட்டினைவிட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% சதவிகித தொகைக்குள் மாமன்ற அதிகார வரம்பிற்குஉட்பட்டுள்ளதால் M/S,RPS Construction, Karur என்பவர் 4.95% சதவிகித கூடுதல் தொகையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர் மூலம் பணியினைசெய்து முடிக்கவும், அதற்கான உத்தரவு வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1243/2021)**

**தீர்மான எண்.608** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**11)** கரூர் மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார் சாலைகளில் தார் பேட்ச் செய்யும் பணிக்கு முதன் முறையாக **30.06.2022**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80லட்சம்</u>**

1. M/s.V.Poobathi& Co, Karur மதிப்பீட்டைவிட 0.06% சதம் குறைவு
2. Thiru.M.Subramaniyam, Karur மதிப்பீட்டைவிட 1.24% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

**1)**மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.**87**, நாள்.**27.05.2022**ம் தேதி ரூ.**9.80** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.Poobathi& Co, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். **(இ1/2790/2022)**

**தீர்மான எண்.609** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**12)** கரூர் மாநகராட்சி வார்டு எண்.**1** முதல் வார்டு எண்.**48** வரை தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை மாநகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் உள்ள சர்வே எண்.**964, 976**ல் **13.68** ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரக்கிடங்கில் கடந்த **39** வருடங்களாக குப்பைகளை கொட்டி சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திடக்கழிவுகளினால் பொதுசுகாதார பாதிப்பு ஏற்படுவதுடன் அன்னியர்களால் அவ்வவ்போது தீ வைக்கப்பட்டு பெரும் சேதம் விளைவிக்கப்படுவதால் பழைய குப்பைகளை அப்புறப்படுத்தும் விதமாக தனியார் நிறுவனத்தின் மூலம் அளவீடு செய்யப்பட்டதில் **1,41,731** கனமீட்டர் குப்பைகள் சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ளதை ரூ.**933.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு **7**வது மாநில உயர்நிலை திட்டக்குழு பரிந்துரையின்படியும் அரசாணை எண்.**36** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.**4**)துறை, நாள்.**22.02.2019**ல் திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018–2019**ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதில் **1,37,394** கனமீட்டர் குப்பைகளை ரூ.**918.64** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அரிக்காரம்பாளையம், அரசுகாலனியில் வாங்கல் சாலை மேல்புறம் ஆகிய பகுதிகளில் **1,19,291** கனமீட்டர் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டுள்ளதை Biomining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.**955.00** இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையினை சென்னைஅண்ணா பல்கலைக் கழகம் Centre for Environmental studies மூலம் கூர்ந்தாய்வு செய்து DPR Evaluation அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி அறிக்கை சமர்ப்பிப்பதற்கான கட்டணம் ரூ.**1,50,000/–** மற்றும் GST (18%)தொகை ரூ.**27,000/–** ஆக மொத்தம் **1,77,000/–** ஐ The Director, Centre for Technology Development and Transfer (CTDT) Anna University, சென்னை அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

**1)**மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான தொகை ரூ.1,77,000/– ஐ The Director, Centre for Technology Development and Transfer (CTDT) Anna University, Chennai அவர்களுக்கு வழங்கியதையும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(5260/இ1/2022)**

**தீர்மான எண்.610** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**13)** கரூர் மாநகராட்சி மண்டலம் 4க்குட்பட்ட வார்டு எண்.36, கணபதி நகர், கலைஞர் நகர் ஆகிய இரு தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் வகையில் உள்ளது. ராயனூர் பகுதியில் இருந்து ஏ.பி.எஸ் மருத்துவமனை வரையுள்ள வாய்க்காலில் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வாய்க்காலின் கரையை பலப்படுத்தி தூர்வாரும் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுதொகை. |
|---|---|---|
| 1) | M/s.Eagle Packer's, Karur | 0.20% குறைவு |
| 2) | M/s.RPS Construction, Karur | 0.50% அதிகம் |
| 3) | Thiru.M.Loganathan, Karur | 1.23% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Eagle Packer's, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. /–மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ1/3792/2022)**

**தீர்மான எண்.611** பதிவு செய்யப்பட்டது.

**14)** தலைமை செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை,அவர்களின் கடிதம் ந.க.எண்.27/P/2021, நாள்:07.09.2021 தேதியிட்ட கடிதத்தில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பணியாக கொரோனா தடுப்பு ஊசி செலுத்துவதற்கு 12.09.2021–ம் தேதி முதல் வாரவாரம் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் அமைத்து கொரோனா தடுப்பு ஊசி செலுத்தாத 18 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைவருக்கும் கொரோனா தடுப்பு ஊசி செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு அனைத்து வாக்கு சாவடி மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் 12.09.2021 முதல் வாரவாரம் நடைபெற்று வருகின்றது. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை, மதியம் ஆக இரு வேளை உணவு மற்றும் தேநீர் வழங்குவதற்கும், மருந்துகள் கொண்டு செல்லும் ஆட்டோ வாகன வாடகை மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பர பதாகைகள் வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் நிதியின் (SDRF)கீழ் அல்லது பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(எச்1/ 8550/2021)**

**தீர்மான எண்.612** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**15)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான ஹிட்டாச்சி இயந்திரம் வாகனத்திற்கு பழுது பணிகள் செய்வதற்கு தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான Bharath Diesels, Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.15370/—ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16000/— (பதினாறாயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.16000/— (பதினாறாயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். (4706/2022/இ7)

**தீர்மான எண்.613** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**16)** கரூர் மாநகராட்சியில் மனோகரா கார்னர், RMS அஞ்சல் அலுவலகம் ஆகியவை கரூர் பேருந்துநிலையத்தை சுற்றி அமைந்துள்ள பகுதிகளாகும். மேற்படி பகுதிகளில் அதிகமான மக்கள் நடமாட்டமும், அதிகப்படியான போக்குவரத்து நெரிசலும் ஏற்படுவதால் மனோகரா கார்னர், RMS அஞ்சல் அலுவலகம் மற்றும் அதை சுற்றியுள்ள அனைத்து இடங்களிலும் அரசியல் மற்றும் அரசியல் சாராத அமைப்புகள் பொதுகூட்டம், ஆர்பாட்டம் மற்றும் உண்ணாவிரதம் போன்றவைகளை நடத்த அனுமதிக்கக்கூடாது என்றும்.

வட்டாட்சியர் அலுவலகமானது கரூரின் மத்திய பகுதியான ஜவஹர் பஜார் கடைவீதியில் அமைந்துள்ளது. மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகாமையில் ஏற்கனவே நிறைய வணிக நிறுவனங்கள் அமைந்துள்ளதாலும், மேலும் தினமும் பொதுமக்கள் முதியோர் உதவித்தொகை, சாதிச்சான்றிதழ், வருமான சான்றிதழ், சிட்டா, பட்டா, அடங்கள் மற்றும் குடும்ப அட்டை உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளுக்காகவும் கரூர் வட்டத்தில் உள்ள பல பகுதிகளிலிருந்து அதிகப்படியாக வந்து செல்கின்றனர். ஆகையால் தற்சமயம் அந்த பகுதியில் அதிகமான மக்கள் நடமாட்டமும், அதிகப்படியான போக்குவரத்து நெரிசலும் ஏற்படுவதால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பாகவும் மற்றும் அதை சுற்றியுள்ள இடங்களிலும் அரசியல் மற்றும் அரசியல் சாராத அமைப்புகள் பொதுகூட்டம், ஆர்பாட்டம் மற்றும் உண்ணாவிரதம் போன்றவைகளை நடத்த அனுமதிக்கக் கூடாது என்றும்.

இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் பொதுக்கூட்டம், ஆர்பாட்டம் மற்றும் உண்ணாவிரதம் ஆகியவற்றை நடத்த அரசியல் மற்றும் அரசியல் சாராத அமைப்புகளுக்கு அனுமதி வழங்கிட மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்கு இம்மாமன்றம் மூலமாக கேட்டுக்கொள்ளலாம்.

**(அ) பொது கூட்டங்களுக்கான இடங்கள் :—**

| வ.எண் | இடங்கள் |
|---|---|
| 1. | வெங்கமேடு அண்ணாசிலை |
| 2. | 80அடி ரோடு |
| 3. | சுபாஷ் சந்திரபோஸ் சிலை அருகில் |
| 4. | உழவர் சந்தை |
| 5. | லைட் ஹவுஸ் கார்னர் |
| 6. | வேலுச்சாமிபுரம் |
| 7. | பசுபதிபாளையம் ரவுண்டானா |
| 8. | காந்திகிராமம் டபுள் டேங்க் |
| 9. | பழைய நகராட்சி அலுவலகம், தாந்தோணிமலை |

**(ஆ) ஆர்பாட்டம் மற்றும் உண்ணாவிரதத்திற்கான இடங்கள்:—**

| வ.எண் | இடங்கள் |
|---|---|
| 1. | தலைமை தபால் நிலையம் கரூர் டவுன் (ஜவஹர் பஜார் மற்றும் ஆசாத் ரோட்டிற்கும் மத்தியில்) |
| 2. | RTO (ஆர்.டி.ஓ) அலுவலகம் முன்புறம் தாந்தோணி |

| | |
|---|---|
| 3. | வேலுச்சாமிபுரம் கரூர் (4—வது கிராஸ் அருகில்) |
| 4. | வாங்கபாளையம் வெங்கமேடு (போலீஸ் பூத் தென்புறம் அருகில்) |

**அலுவலக குறிப்பு :—**
பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் (அ) பொதுகூட்டம் (ஆ) ஆர்ப்பாட்டம் மற்றும் உண்ணாவிரதம் நடத்த இனிவரும் காலங்களில் அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் காவல்துறைக்கு அனுப்பி வைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(6756/2022/எப்1)**

**தீர்மான எண்.614** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**17)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 பழைய போஸ்ட் ஆபிஸ் தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணி சிறப்பு சாலைத் திட்டம் 2020—2021ன்கீழ் பணி தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு 12.02.22021 அன்று M/s.சக்தி இன்ஜீனியரிங், தாளியாப்பட்டி நிறுவனத்திற்கு வழுங்கப்பட்டு, பணி துவங்க காலதாமதம் ஆனதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2304/2021/இ1, நாள்.20.10.2021அன்று ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/6570/2022)

**தீர்மான எண்.615** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**18)** கரூர் மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட வார்டு எண்.17 இராமானுார் நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் உள்ள பழைய நீர்த்தேக்கத் தொட்டி 4 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டது மிகவும் சிதிலடைந்து பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் குடியிருப்புக்கு அருகாமையில் உள்ளது. பொதுமக்கள் நலன் கருதி சிதிலடைந்துள்ள பழைய நீர்த்தேக்கத் தொட்டியை ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.616** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**19)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.32 மண்டலம் —2ல் உள்ள கோட்டை மேடு மாநகராட்சி பள்ளியில் மின் விசிறிகள், லைட் பாயிண்டுகள் புதிதாக மாற்றவும், எழுதும் பலகைக்கு வண்ணம் பூசுதல் மற்றும் இதர வேலைகள் செய்யும் பணிக்கு ரூ.1.05லட்சம் மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | **RPS Construction, Karur** | 0.34% குறைவு |
| 2) | CVM & Co, Karur | 0.45% அதிகம் |
| 3) | M.Loganathan, Karur | 1.43% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s. RPS Construction, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.93778/—மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1/2022)

**தீர்மான எண்.617** பதிவு செய்யப்பட்டது.

**20)** தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சென்னை மாவட்டத்தில் செஸ் ஒலிம்பிக் போட்டி 2022 நடைபெற இருக்கும் போட்டியினை பொது மக்களுக்கு செஸ் போட்டியினை ஊக்குவிக்கும் வகையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் மைதானத்தில் செஸ் ஒலிம்பிக் 2022 என்ற விளையாட்டிற்கு மாநகராட்சி அலுவலகம் முன்பு மிகப்பெரிய அளவில் செஸ் போர்டு வரையவும், மாநகராட்சி அலுவலகத்திலிருந்து திருவள்ளுவர் மைதானம் வரை ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொள்ளும் அணிவகுப்பு நடைபெறவுள்ளது. மேலும் மாணவர்களுக்கு டி.சர்ட், தொப்பி, குடிநீர் பிஸ்கட், பழரசசாறு வழங்கவும் மற்றும் திருவள்ளுவர் மைதானம் நகரில் முக்கிய பகுதிகள் செஸ் ஒலிம்பிக் 2022 என்ற விளம்பரம் போர்டு வைக்கவும், மைதானத்தில் டேபிள் சேர், மைக் செட், தலைவிரிப்பான்கள், மற்றும் சைடு தடுப்பாணை அமைக்கவும், செஸ் பேட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு நினைவு பரிசு வழங்கும் பணிக்கு ரூ.5,25,000/—மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | Sri Krishna Traders, Karur | 0.26% குறைவு |
| 2) | Thiru,M,Loganathan, Karur | 0.23% அதிகம் |
| 3) | Thiu.P.Nallusamy, karur | 0.58% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri Krishna Traders, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.5,21,152 /—மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ6/2022)

**தீர்மான எண்.618** பதிவு செய்யப்பட்டது.

**21)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் —IIல் வார்டு எண்.20,21,22,23,24,25,26 மற்றும் 27 ஆகிய 8 வார்டுகளுக்கு நெரூர் மற்றும் மேல மாயனூர் பகுதியிலுள்ள தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து பாலாம்பாள்புரம் நீரேற்று நிலையத்தில் தரை மட்ட நீர்தேக்க தொட்டியில், சேகரிக்கப்பட்டு ஊதியத்திலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்று செய்யப்பட்டு அதன் வழியாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மண்டலம் —II—ல் வார்டு எண்.20,21,22,23,24,25,26 மற்றும் 27 அமைக்கப்பட்ட சிறுமின்விசை பம்புகளால் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள்,குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய்களில் ஏற்படும் கசிவுகள், மற்றும் அந்தந்த பகுதிகளிலுள்ள நீரேற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் பணியின் அவசியம் கருதி உடனுக்குடன் பணிகள் மேற்கொள்ள ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்து மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள போதிய அளவில் மாநகராட்சியில் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/2022)

**தீர்மான எண்.619** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**22)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–II–ல் வார்டு எண்.29,20,31,32,33,34 மற்றும் 35 ஆகிய 7 வார்டுகளுக்கு நெரூர் மற்றும் மேலமாயனூர் பகுதியிலுள்ள தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து பாலாம்பாள்புரம் நீரேற்று நிலையத்தில் தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் சேகரிக்கப்பட்டு அதிலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக் க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு அதன் வழியாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மண்டலம் – II–ல் வார்டு எண்.29,30, 31, 32, 33 ,34 மற்றும் 35 அமைக்கப்பட்ட சிறு மின்விசை பம்புகளால் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய்களில் ஏற்படும் கசிவுகள் மற்றும் அந்தந்த பகுதிகளிலுள்ள நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் பணியின் அவசியம் கருதி உடனுக்குடன் பணிகள் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள போதிய அளவில் மாநகராட்சியில் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.620** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**23)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–II. வார்டு எண். 25,26,27,30,31 பகுதிகளில் உள்ள குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் உரக் கிடங்கில் அரைத்து உரம் தயாரிக்க 4 MT கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது மேற்படி உரக் கிடங்கில் பராமரிப்பு பணி செய்ய வேண்டியுள்ளது. மேலும் அங்கு பணிபுரியும் பணியாளருக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு RO அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.40 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.40 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.621** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**24)** கரூர் மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக கீழ்கண்ட கணிணி பிரிண்டர்களுக்குண்டான டோனர்கள் அவசியமாக தேவைப்படுகிறது.

1 12A –HP Orininal Catriges – 20 Nos
2 88A - HP Orininal Catriges – 25 Nos
3 93 A - HP Orininal Catriges – 3 Nos

மேற்கண்ட டோனர்கள் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.50 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
(இ1/6741/2022)

**தீர்மான எண்.622** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**25)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – II வார்டு எண். 23,27,32 மற்றும் 34 பகுதிகளில் உள்ள 7 சிறுபாலம் சேதமடைந்த காரணத்தால் மழைநீர் வெளியேற முடியாமல் சாலையில் வழிந்து வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி சேதமடைந்த சிறுபாலங்களை சீர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.9.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/6740/2022)

**தீர்மான எண்.623** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**26)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–I வார்டு எண்.28–ல் உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை மெயின் லைன் மற்றும் சாலைகளின் மேற்பகுதியில் மேன்ஹோல் உள்ளது. மண்டலம்–I பகுதி இனாம் கரூர், வெங்கமேடு, குளத்துப்பாளையம், கோதூர் மற்றும் வாங்கப்பாளையம், கொங்கு நகர் பகுதிகளில் உள்ள UGD Manhole Cover – வாகனங்கள் தொடர்ந்து செல்வதால் அடிக்கடி மேற்கூரை மூடி உடைந்து, வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பயணிக்க மிகவும் சிரமத்திற்குள்ளாவதால் மேற்கண்ட (மண்டலம்–I) பகுதிகளில் உள்ள 12 வார்டுகளிலும் சேதமடைந்த UGD Manhole Cover – புதிதாக மாற்றியமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்தை குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
(இ5/6751/2022)

**தீர்மான எண்.624** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**27)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 பழனியப்பாதெருசிமெண்ட் தளம் அமைக்கும் பணி சிறப்பு சாலைத் திட்டம் 2020–2021ன் கீழ் பணி தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு 12.0.22021 அன்று M/s.சக்தி இன்ஜீனியரிங், தாளியாப்பட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பணி துவங்க காலதாமதம் ஆனதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2304/2021/இ1, நாள்.20.12.2021 அன்று ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.18.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகைரூ.18.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/6569/2022)

**தீர்மான எண்.625** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**28)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–3 வார்டு எண்.15 எம்.ஆர்.நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி சிறப்பு சாலைத் திட்டம் 2020–2021ன் கீழ் பணி தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு 12.0.22021அன்று M/s.சக்தி இன்ஜீனியரிங்,

தாளியாப்பட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பணி துவங்க காலதாமதம் ஆனதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2304/2021/இ1, நாள்.20.12.2021அன்று ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று தயார் செய்யப்பட்ட மதிப்பீடுதொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகைரூ.25.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/6571/2022)

**தீர்மான எண்.626** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**29)** கரூர் மாநகராட்சி மண்டலம்–1 வார்டு எண்.4 கருப்பகவுண்டர் தெருவில் உள்ள சாலை மிகவும் மோசமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனம் சென்று வர சிரமமாக உள்ளதாலும், பொதுமக்களின் கோரிக்கை ஏற்று மேற்காணும் சாலையினை தார் சாலைகளாக மாற்ற தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.11.00 இலட்சம் மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/6763/2022)

**தீர்மான எண்.627** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**30)** கரூர் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண்.14,15 பகுதிகிளில் இருந்து வரும் குடிநீர் விநியோகக் குழாய்கள் நெடுஞ்சாலைத் துறையினரின் பழைய திருச்சி ரோடு விரிவாக்கம் செய்யும் பணிக்காக மரங்களை அப்புறப்படுத்தும் போது பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி குடிநீர் விநியோகக் குழாய்களை செப்பனிட்டு உடன் பராமரிப்பு செய்தல் வேண்டும். மேலும் அதற்கான வால்வுகள் சீரமைக்கவேண்டும். வார்டு எண்.40 இந்திரா நகர் தெற்கில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்படவில்லை. மேற்படி இடங்களில் தற்போது குடியிருப்புகள் வந்துவிட்டதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் விநியோகக் குழாய்கள் பதிக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேசத் தொகை ரூ.13.25 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.13.25 இலட்சம் மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/2022)

**தீர்மான எண்.628** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**31)** கரூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டமானது கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பாலம்மாள்புரம் கழிவு நீரேற்றும் நிலையத்தில் நீரேற்றம் செய்து அரசு காலனியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்த பின்பு விவசாயத்திற்கு அனுப்பப்படுகிறது. பாலம்மாள்புரத்தில் நீரேற்றும் நிலையத்தில் இருந்துதான் கரூர் பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளில் இருந்து வரும் கழிவு நீர் சேகரிக்கப்பட்டு நீரேற்றும் செய்யப்பட்டுள்ளது. எனவே வாங்கல் சாலையில் உள்ள பிரதான நீரேற்றும் குழாய் பாலத்தில் உடைப்பு எற்பட்டதால் அங்கு கரூர் நகரில் இருந்து வரும் அனைத்து கழிவு நீரும் வாய்க்காலில் வெளியேறி வருகிறது. இது பொதுமக்களுக்கு மிகவும் சுகாதார கேடும் ஏற்படும் சூழ்நிலையாகும். எனவே இதை உடன் சரி செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே

இப்பணியினை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**3.70** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.**3.70** இலட்சம் மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6764/2022)**

**தீர்மான எண்.629** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**32)** கரூர் மாநகராட்சி மண்டலம்–**3**க்குட்பட்ட வார்டு எண்.**12,13,17,19**, மற்றும் **38**ல் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றில் பிறஉபயோகத்திற்கான நீர் தேவைக்கு புதிய மின் மோட்டார் அமைப்பது மிகவும் அவசியமாகிறது. மேலும் அந்த இடங்களில் உள்ள HDPE தொட்டிகள் மற்றும் பிளாட்பார்ம்கள் மராமத்து பணிகள் செய்வது அவசியமாகிறது. மேற்கண்ட இடங்களில் உள்ள ஆழ்துளை கிணற்று நீரானது பிற உபயோகத்தில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. எனவே பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு இதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேசத் தொகை ரூ.**11.25** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.**11.25** இலட்சம் மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ6/2022)**

**தீர்மான எண்.630** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**33)** திருமதி.அ.பாலவித்யா **33**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

**1)** உழவர் சந்தை எதிரில் உள்ள சிட்டி யூனியன் வங்கி ஏ.டி.எம்., எந்தவித உபயோகமும் இல்லாத காரணத்தால் அதை அப்புறப்படுத்திவிட்டு பேருந்து நிறுத்தம் நிழற்குடை அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
**2)**வஞ்சியம்மன் கோவில் தெருவில் உள்ள ஆண்கள், பெண்கள் கழிப்பிடத்தை பராமரிப்பு செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
**3)**வஞ்சியம்மன் கோவில் தெரு ஆற்றங்கரை ஓரத்தில் மின்விளக்கு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.631** மாமன்ற உறுப்பினர் திருமதி.அ பாலவித்யா அவர்கள் முன்மொழிந்து மாமன்ற உறுப்பினர் திருமதி.ரா.தெய்வானை அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**34)** திரு.எம்.பாண்டியன் **5**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு–**5** வெங்கமேடு பகுதியில் உள்ள வாங்கப்பாளையம் பேருந்து நிலையம் அருகில் ஏ.டி.எம். மிஷின் மற்றும் பயணிகள் நிழற்குடை அமைந்துள்ளது. அந்த இடத்தில் சமூக விரோதிகள் அமர்ந்து பல சமூக விரோத செயல்களை செய்து வருகின்றனர். அதனால் பேருந்து பயணத்திற்கு செல்லும் மக்கள் பேருந்து நிறுத்தத்தில் இருக்கும் அந்த நிழற்குடையில் அமருவதற்கும், பேருந்து நிறுத்தத்தில் நின்று பஸ் ஏறுவதற்கும் அச்சப்படுகின்றனர். அதனால் மக்களுக்கு உபயோகம் இல்லாத அந்த பயணிகள் நிழற்குடையை அப்புறப்படுத்துவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.632** மாமன்ற உறுப்பினர் திரு.எம்.பாண்டியன் அவர்கள் முன்மொழிந்து மாமன்ற உறுப்பினர் திருமதி.செ.மாரியம்மாள் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**35)** திரு.எம்.பாண்டியன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் மாநகராட்சி வெங்கமேடு 5வது வார்டு பகுதியில் வாங்கப்பாளையம் டூ அருகம்பாளையம் சாலையில் இடதுபுறம் காதப்பாறை பஞ்சாயத்து யூனியனில் அரசு உயர்நிலைப்பள்ளி அமைந்துள்ளது. அந்த பள்ளியில் 600 மாணவர்கள் பயில்கின்றனர். 20 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளிக்கு பல அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன.

1) புதிய வகுப்பறைகள் (6 வகுப்பறைகள்) கட்டித் தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2) மாடியில் இருக்கும் வகுப்பறைகளை இரண்டாக தடுப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
3) வகுப்பறைகளை பிரிக்கும் போது கரும்பலகைகள் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
4)மாணவர்கள் எண்ணிக்கை அதிகம் இருப்பதால் மாணவர்களுக்காக கழிப்பறை வசதி செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
5)கழிப்பறை கதவுகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் அதை தகர்த்தி புதிய கதவுகள் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
6) பள்ளியை தூய்மை செய்ய துப்புரவு பணியாளரும், கழிப்பறை சுத்தம் செய்ய கழிப்பறை பணியாளரும் வேலைக்கு நியமனம் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
7)அங்கு இருக்கும் குப்பைகளை போடுவதற்கு பெரிய குப்பைத தொட்டி அமைப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
8)கழிப்பறை தண்ணீர் வெளியேவதற்கு வடிகால் அமைப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
9) பள்ளி கட்டிடம் முழுவதும் பிளமிங் வேலை செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
10) மாணவர்களுக்கான தேவையான டெஸ்க் மற்றும் பென்ச் 120 கொள்முதல் செய்வதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
11) சி.சி.டிவி .கேமரா அமைப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
12) அலுவலகத்தில் இரண்டு கணிணிகள் தேவைப்படுவதால் கொள்முதல் செய்வதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
13) 3 மர பீரோவும் , 5 இரும்பு பீரோவும் ( லைப்ரரிக்கு ) எஸ் டைப் சேர் ( 20) தேவைப்படுவதால் கொள்முதல் செய்வதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
14) குண்டு எறிதல் – 3 கிலோ (1), 4 கிலோ(1) வாங்குவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
15) ஈட்டி எரிதல் – 600 கிராம் (1), 700 கிராம் (1) வாங்குவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
16) தட்டு எறிதல் – 1 கிலோ (1) 1.50 கிலோ(1) வாங்குவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
17) எடை மிஷின் ( எலக்ட்ரானிக்) 30 மீட்டர் டேப் கொள்முதல் செய்வதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

இது போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு இந்த பள்ளிகளின் மேலாண்மைக் குழு பிரதிநிதிகளான 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.பாண்டியன், 6வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். மாரியம்மாள் ஆகிய எங்கள் இருவரிடத்திலும் குழந்தைகளின் நலன் கருதி கோரிக்கை வைத்துள்ளனர்.மேலும் நாடாளுமன்றம்,சட்டமன்றம் , ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நடக்கும் தேர்தல் வாக்கு சாவடிகள் கரூர் மாநகராட்சி மூலமாக இந்த பள்ளியில் தான் நடத்தப்படுகிறது. இந்த கடிதத்தில் தனிகவனம் செலுத்தி உயர்திரு மாநகராட்சி மேயர் அவர்கள் வசதிகளை செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்

இந்த கட்டிடம் காதப்பாறை பஞ்சாயத்தில் அமைந்துள்ளது. ஆனால் இந்த கட்டிடத்தின் வரிகள் கரூா மாநகராட்சியில் கட்டப்படுகிறது.

நாடாளுமன்றம், சட்டமன்றம் ,ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நடக்கும் தேர்தல் வாக்குச்சாவடிகள் கரூர் மாநகராட்சி மூலமாக இந்த பள்ளியில்தான் நடத்தப்படுகிறது.

**தீர்மான எண்.633** மாமன்ற உறுப்பினர் திரு.எம்.பாண்டியன் அவர்கள் முன்மொழிந்து மாமன்ற உறுப்பினர் திருமதி.செ.மாரியம்மாள் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**36)** திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1) தேர்வீதியில் உள்ள அர்ச்சனா அருகே உள்ள மழைநீர் செல்லும் வடிகாலை மாற்றி அதன் மேல் சிறுபாலம் கட்டி தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2)சாத்தாணி சந்தில் உள்ள சிறிய பிட் ரோடை சிமெண்ட் ரோடு போட்டு தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
3)மேற்கு நஞ்சைய தெருவில் சிறிய சந்தில் சிமெண்ட் ரோடு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
4)மேற்கு நஞ்சைய தெருவில் பொதுமக்கள் பயன்பெறும் கின்டெக்ஸை நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் மாற்றி வைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.634** மாமன்ற உறுப்பினர் திருமதி.வெ.நந்தினி அவர்கள் முன்மொழிந்து மாமன்ற உறுப்பினர் திருமதி.ச.பிரேமா அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**37)** திரு.எம்.ரமேஷ் 26வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

1) கரூர் 80அடி சாலை வடபுறம் அரவிந்த் – ஏ– டிரேடர்ஸ் முன்பிலிருந்து மேற்கே குளோபல் டெக்ஸ் வரை புதிய மழைநீர் வடிகால் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2) கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் மேலாண்மைக் குழு உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகிறேன். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று பள்ளியின் மையப் பகுதியில் சேதமடைந்த நிலையில் உள்ள டைமண்ட் ஜீப்ளி ஹாலை இடித்து அகற்றிக் கொடுப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.635** மாமன்ற உறுப்பினர் திரு.எம்.ரமேஷ் பாலவித்யா அவர்கள் முன்மொழிந்து மாமன்ற உறுப்பினர் திருமதி.ர.தேவி அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**38)** திரு.எம்.பாண்டியன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்.

கரூர் மாநகராட்சி வெங்கமேடு 5வது வார்டு பகுதியில் வாங்கப்பாளையம் டு அருகம்பாளையம் சாலையில் இடதுபுறம் காதப்பாறை பஞ்சாயத்து யூனியனில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அமைந்துள்ளது. அந்த பள்ளியில் 250 மாணவர்கள் பயில்கின்றனர். 7 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளிக்கு பல அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன.

1) கழிப்பறை கட்டிடம் மிகவும் மோசமானநிலையில் இருப்பதால் அதை தகர்த்தி புதிய கழிப்பறை கட்டி தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2)பள்ளி வளாகத்தை சுற்றி உள்ள சுற்றுச் சுவரை உயரப்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
3)உயர்நிலை பள்ளியிலிருந்து சத்துணவு வருவதால் இந்த பள்ளிக்கு தனியாக சத்துணவு கூடம் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
4)பள்ளியை தூய்மை செய்ய துப்புரவு பணியாளரும், கழிப்பறை சுத்தம் செய்ய கழிப்பறை பணியாளரும் வேலைக்கு நியமணம் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
5)அங்கு இருக்கும் குப்பைகளை போடுவதற்கு பெரிய குப்பைத் தொட்டி அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
6)கழிப்பறை தண்ணீர் வெளியேறுவதற்கு வடிகால் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

இது போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு இந்த பள்ளிகளின் மேலாண்மை குழு பிரதிநிதிகளான 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.பாண்டியன், 6வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.மாரியம்மாள், ஆகிய எங்கள் இருவரிடத்திலும் குழந்தைகளின் நலன் கருதி கோரிக்கை வைத்துள்ளனர். மேலும் நாடாளுமன்றம், சட்டமன்றம்,ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நடக்கும் தேர்தல் வாக்கு சாவடிகள் கரூ மாநகராட்சி மூலமாக இந்த பள்ளியில்

தான் நடத்தப்படுகிறது. இந்த கடிதத்தில் தனி கவனம் செலுத்தி உயர்திரு. மாநகராட்சி மேயர் அவர்கள் வசதிகளை செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கட்டிடம் காதப்பாறை பஞ்சாயத்தில் அமைந்துள்ளது. ஆனால் இந்த கட்டிடத்தின் வரிக ள் கரூர் மாநகராட்சியில் கட்டப்படுகிறது.

நாடாளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் நடக்கும் தேர்தல் வாக்கு சாவடிகள் கரூர் மாநகராட்சி மூலமாக இந்த பள்ளியில் தான் நடத்தப்படுகிறது.

**தீர்மான எண்.636** மாமன்ற உறுப்பினர் திரு.எம்.பாண்டியன் அவர்கள் முன்மொழிந்து மாமன்ற உறுப்பினர் திருமதி.செ.மாரியம்மாள் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**39)** திருமதி.இந்திராணி 35வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானங்கள்

1)கிழக்கு வஞ்சியம்மன் கோவில் தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அந்த இடத்தில் புதிதாக கட்டிடம் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2)கிழக்கு வஞ்சியம்மன் கோவில் தெருவில் மூர்த்தி மளிகை கடை முன்புறம் உள்ள கான்கீரிட் சாலை அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
3)கனகமுடி தெருவில் உள்ள கழிவறை பயன்பாடற்ற நிலையில் உள்ளது, அதை பராமரிப்பு வேலைகள் செய்து கொடுப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
4)மேட்டுத் தெருவில் உள்ள உமையாள் பள்ளியில் கீழ்கண்டுள்ள வேலைகள் செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

(1) முன்புறம் கதவு அருகே தரையில் பெரும்பள்ளம் ஏற்பட்டுள்ளதை சரி செய்தல்.
(2) ஆர்.ஓ. குடிநீர் அமைத்து தர வேண்டும்.
(3) பள்ளி கழிவறைகள் சுத்தம் செய்வதற்கு ஆட்கள் அமர்த்தி கொடுக்க வேண்டும்.
(4) பள்ளி குழந்தைகள் கை அலம்புவதற்கு தண்ணீர் குழாய் அமைத்து கொடுக்க வேண்டும்.
(5) மாணவர்கள் உணவு அருந்தும் இடத்திற்கு மேற்கூரை அமைத்து கொடுக்க வேண்டும்.

5)வஞ்சியம்மன் கோவில் தெருவிற்கு உட்பட்ட ரேசன் கடைக்கு புதிதாக கட்டிடம் அமைத்து கொடுப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
ரேசன்கடை எண்.12 AC 33 PN,
கட்டிடம் கட்டுவதற்கு உரிய இடம் .வார்டு –1 பிளாக்–26 TS,NO.1333/.1
6)மேட்டுத்தெருவிற்கு உட்பட்ட ரேசன் கடைக்கு புதிதாக கட்டிடம் அமைத்து கொடுப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
ரேசன்கடை எண்.12 AC 06 1PN
கட்டிடம் கட்டுவதற்கு உரிய இடம். வார்டு –2 பிளாக்–28 TS,NO.857/1
7)வளையல்காரத் தெருவில் உள்ள சாலை புதிதாக அமைத்து கொடுப்பதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
8)வளையல்காரர் தெரு, குருசாமி தெரு பலிஜவார் தெரு, பொரிக்காரத் தெருவில் உள்ள கழிவுநீர் சாக்கடைகள் அனைத்தும் ஆழப்படுத்தி மற்றும் அகலப்படுத்தி புதிதாக கட்டித் தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.637** தீர்மான எண் 39ல் பகுதி 1முதல் 4 மற்றும் 7,8 வரை உள்ள பொருள்கள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 5 மற்றும் 6வது தீர்மானங்கள் கூட்டுறவு துறை சம்மந்தமாக வருவதால் கூட்டுறவுதுறை இணைத்து ஆய்வு செய்து சேரசன் கடைக்கு புதிதாக கட்டிடம் கட்ட இம்மான்றம் அனுமதிக்கிறது.

**மேயர்**
**கரூர் மாநகராட்சி**